கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண். 4/2016

வா.சா. 2 - கண்ணப்பன்

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னை சாட்சி சொல்வதற்காக 5ம் வாதி அழைத்துவந்தார். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் பங்கு விபரங்கள் சொல்லப்பட்டுள்ளன. தாவா சொத்தை நான் குத்தகைக்கு பார்த்து வருகிறேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். இந்த வழக்கு யார் யார் சேர்ந்து, எதற்காக போட்டுள்ளனர் என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் அளவுகள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியாது. நான் 1- ம் வாதி சண்முகத்திடம் குத்தகை போட்டேன். 16 ஏக்கர் குத்தகைக்கு எடுத்துள்ளேன். 2011ம் ஆண்டு குத்தகைக்கு எடுத்தேன். வழக்கு சொத்துக்கள் மானாவாரி நிலம் தான் கிணற்றுபாசனம் இல்லை. குத்தகை ஒப்பந்தம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. வருடாவருடம் குத்தகை கொடுத்துவிடுவதாக பேசிக்கொண்டோம். ரூ.10,000/- ஒரு வருடத்திற்கு குத்தகை பேசிக்கொண்டோம். குத்தகை தொகை ரூ.10,000/- சண்முகத்திடம் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் என்னிடம் இல்லை. 2 ஆண்டுகளாக, 5ம் வாதி சுரேஷ்யிடம் குத்தகை போட்டுக்கொண்டேன். அதற்கு ஆண்டுக்கு ரூ.20,000/- குத்தகை. எழுத்து மூலமான குத்தகை ஒப்பந்தம் கிடையாது. சண்முகம் மற்றும் சுரேஷ் உடன் குத்தகை போட்டபோது, வேறுயாரும் இல்லை. நாங்கள் மூன்று பேர் மட்டும் தான் இருந்தோம். தாவா சொத்தை ஆடு, மாடு மேய்ப்பதற்காக வருட குத்தகைக்கு எடுத்துள்ளேன். குத்தகை விபரத்தை வருவாய் துறை ஆவணங்களில் பதிவு செய்யவில்லை. வழக்குசொத்துக்கள் ஆறுமுக கவுண்டருக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். அவருக்கும், அவரது வகையறாவும் 1976ம் வருடம் பாகப்பிரிவினை ஆகிவிட்டது. 1976ம் வருடம் முதல் 1ம் வாதியும், அவரது குடும்பமும், ஓசூரில் பணம் லேவாதேவி தொழில் செய்து, குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டருக்கு நல்லம்மாள் மற்றும் மீனாட்சி என்ற இரண்டு மனைவிகள். 2ம் பிரதிவாதி கலையரசியை எனக்கு தெரியாது. நான் பார்த்ததில்லை. ஆறுமுக கவுண்டர் தனது முதல் மனைவி இறந்த பிற்பாடு, 2வது மனைவி மீனாட்சியுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். ஆறுமுகக் கவுண்டர் இறப்பதற்கு முன்பு , தன் சொத்துக்களை, 2, 3, பிரதிவாதிகளுக்கு பாத்தியம் செய்து கொடுத்துள்ளார் என்ற

விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது சொத்தின் சர்வே எண். 446. நான் வழக்கு சொத்து சம்மந்தமாக சண்முகத்திடமோ, சுரேஷிடமோ குத்தகைக்கு போடவில்லை என்றும், ரூ.10,000/-யோ, ரூ.20,000/-யோ குத்தகை தொகை கொடுத்ததில்லை என்று சொல்வது சரியல்ல. சுரேஷ்ம் நானும் நீண்ட நாள் நண்பர்கள் என்றால் சரியல்ல. நான் சண்முகம், சுரேஷ் ஆகியோர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.09.08 19:28:12 +0530

Additional Distrtict Judge
Diddigul